# வடந்தை

துகளில்லாத புது உலகம் தோன்றல் வேண்டும் என்போம்

காலம் - 01 | புரட்டாதி - மார்கழி | காற்று - 03





## நுழைவாயில்

அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இது வடந்தையின் 3வது இதழ்
கடந்து வந்த காலங்களின்
எமது பண்பாட்டலுவல்கள்
செயற்பாடுகளை
மீள நினைவுகூர்ந்து
அடுத்துவரும் ஆண்டுச்
செயற்பாடுகளை
உற்சாகமாக எதிர்கொள்ள
முயல்கிறோம்.

உங்களது ஒத்துழைப்பே
எமக்கான முதல் உந்துவிசை
வடந்தையை இதமாக வீசச் செய்ய
தங்களது ஆதரவைக் கோருகிறோம்.

பக்க அளவுக்குள்
அடங்கக் கூடியதாக
ஆக்கங்களை அனுப்பி
உதவுங்கள்
புது நாற்றுக்களை
விதைத்து - நல்லறுவடையை மேற்கொள்ளுவோம்
மறுமடலில் மீண்டும் சந்திக்கிறோம்.




**வெளியீடு :**

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம்
தொலைபேசி இல : 0602266990

**ஆலோசகர் :**

திரு. இ. இளங்கோவன்
செயலாளர்
கல்வி அமைச்சு
வடமாகாணம்

**முகவரி :**

உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்,
வரோதயநகர்.

**ஆசிரியர் குழு :**

திருமதி. என்.ஸ்ரீதேவி
திரு. வி.குணபாலா
திரு. நந்தினி சேவியர்

**கணணி வடிவமைப்பும்**

**அச்சும் :**

ரெயின்போ மினிலாப் (பிரிஇ) லிமிடட்
திருக்கோணமலை

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாவார்


## எதிர்வு

### வடந்தை முன்மாதிரியானதொரு முயற்சி

தமிழ் பேசும் மக்களின் விழுமியங்களை, பண்பாடுகளை புதுப் பொலிவுடன் வெளிக்கொணர்ந்து மலர்ந்திருக்கும். 'வடந்தை' முன்மாதிரியான முயற்சி எனத் தாராளமாகவே கூறத்தக்கதாக தனது முதலாவது அறுவடையிலே ஆழத் தடம் பதித்துள்ளது. வடமாகாண கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிப்பதற்கும் அப்பால் ஆக்கபூர்வமான பங்களிப்பிற்காகவும் களம் அமைத்துத் தந்திருக்கும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினை குறிப்பாக வடந்தையின் ஆலோசகர் திரு. இ. இளங்கோவன், ஆசிரிய குழாமில் அங்கம் வகிக்கும் திருமதி. என் ஸ்ரீதேவி, , திரு. வி. குணபாலா. திரு நந்தினி சேவியர் ஆகியோரை எத்துணை பாராட்டினுந் தகும்!

காத்திரமான கட்டுரைகள், இலக்கிய நிகழ்வுச் செய்திகள், தகவல்கள், புகைப்படங்கள் என அகலக் கால்கோளிட்டிருக்கும் 'வடந்தை' அதிகளவுஆக்கங்களையும் தாங்கி வெளிவந்து மாகாணத்தில் மட்டுமல்லாது இலங்கையிலே சிறந்ததோர் மாசிகையாகவும் மிளிர வேண்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்
கொழும்பு – 06


---

அன்புடையீர்,

தாங்கள் அனுப்பி வைத்த வடந்தை வைகாசி – ஆவணி இதழ் கிடைக்கப்பெற்றேன் நன்றி.

பண்பாட்டுத்துறை சார்ந்த செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் விபரங்கள் காணக் கிடைத்தன. இப்பதிவுகள் மிகவும் அவசியமானவை. வாழ்த்துக்கள்.

ம. சண்முகநாதன்
உதவிப்பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.



# ஆளுனர் விருது – 2008
## விருதுக்குரியவர்கள்

திரு. முத்தர் நடராசா (பாகவதர்)
திரு. கந்தையா நாகப்பு
திரு. இராசு சுந்தர மூர்த்தி
திரு. பி.பி. அந்தோனிப்பிள்ளை.
சங்கீதபூஷணம் எல். திலகநாயகம் போல்
திரு. கந்தையா நடேசு (தெணியான்)
திரு. வீ.சிவசுப்பிரமணியம் (ரமணி)
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
திரு.லெ. கெங்காதரன் ஆச்சாரி
திரு. ஆசை இராசையா


## ஆளுநர் விருதுபெறுவோர்க்கான ஆசிச்செய்தி

காலத்தால் அழியாத கலை இலக்கியங்களே ஒரு இனத்தை அடையாளப்படுத்துகின்ற சான்றுகளாகின்றன. தமிழர் தம் பாரம்பரியத்தைக் கலை இலக்கிய வடிவங்களாக்கிப் பவித்திரப்படுத்திய பதின்மர் இவ்வாண்டு கௌரவ ஆளுநர் விருதுப்பட்டியலில் தம் பெயரைப் பதிவு செய்துள்ளார்கள். இது ஒரு வரலாற்றுப் பணிக்குக் கிடைத்த கௌரவமாகும். இம் மூதறிஞர்களின் கலைச் சேவையின் வழி இளம் சந்ததியினரையும் இணைத்துப் பயணிக்க வைக்க நாம் முயலுதல் வேண்டும். கலை இலக்கியப் பணியின் அவசியம் பற்றி உணரச் செய்வதற்கு இத்தகைய விருதுகள் ஒரு ஊக்கியாக அமையும் என நான் கருதுகிறேன். அயராது உழைத்த ஐயிரண்டு கலைஞர்களின் ஆளுமைகளால் இவ்விருது பெருமை பெறுகிறது. இவ்விருதுப் பட்டியல் நாளை ஒரு வரலாறாகும் எனக்கூறி இவர்கள் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

"சேண் உயர் தேசமெங்கும்
இவர் புகழ் சென்று சேரட்டும்"
இத்தகைய நற்பணியை ஆற்றும் கல்வி அமைச்சையும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தையும் பாராட்டுகின்றேன்.

**திரு. எஸ். ரங்கராஜா**
பிரதம செயலாளர், வட மாகாணம்.

**26.12.2008 நடேசராலய பூஜைப் பொருட்கள் அன்பளிப்பு நிகழ்வு**



## வடமாகாண ஆக்க இலக்கியப் போட்டி – 2008

பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடமாகாணத்தின் தலைமைச் செயலகங்களில் (அமைச்சுக்கள், திணைக்களங்கள்) கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் கலைத்திறமையை வெளிப்படுத்தும் நோக்கில் கவிதை, குறுநாடக எழுத்துரு, சிறுகதை, குறும்பட எழுத்துரு ஆகிய ஆக்க இலக்கிய துறைகளில் போட்டியை நடாத்தியது.

இப்போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூவருக்கு பணப்பரிசில்களும், சான்றிதழ்களும், வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் போட்டியில் பங்குபற்றிய அனைத்து உத்தியோகத்தர்களுக் கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு 2008.09.23 ம் திகதி நடைபெற்றது. போட்டியின் முடிவுகள் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| கவிதை | 1 ஆவது | : குமாரசாமி மாக்ஸ் | – நீர்ப்பாசனத் திணைக்களம். |
| | 2 ஆவது | : வெ. இந்திரஜித் | – கூட்டுறவுத் திணைக்களம். |
| | 3 ஆவது | : தி. கல்பனா | – மாகாணப் பொது நிர்வாகம் |
| சிறுகதை | 1 ஆவது | : புவ்பராஜ் துஜீஸ்காந்த் | – சமூக நலத்துறை திணைக்களம். |
| | 2 ஆவது | : கதிர்காமநாதன் சிவகுமார் | – சமூக நலத்துறைத் திணைக்களம். |
| | 3 ஆவது | : ரஞ்சனா நவரட்ணம் | – உள்ளூராட்சி அமைச்சு |
| நாடக எழுத்து | 1 ஆவது | : வெ.இந்திரஜித் | – கூட்டுறவுத் திணைக்களம். |
| | 2 ஆவது | : இ.இராஜேஸ்வரன் | – மாகாணக் கல்வித் திணைக்களம் |
| | 3ஆவது | : திருமதி. ரஞ்சனா நவரட்ணம் | – உள்ளூராட்சித் திணைக்களம் |

குறும்பட எழுத்துரு – சான்றிதழ் பெறுவோர்.

ரஞ்சனா நவரட்ணம் – உள்ளூராட்சி அமைச்சு.

வெ. இந்திரஜித் – கூட்டுறவுத் திணைக்களம்.

– குணா

## மாகாண மட்ட பரதநாட்டியப் போட்டி – 2008

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தனிநபர், மற்றும் கலை இலக்கிய மன்றங்களுக் கிடையே நடாத்தப்பட்ட மாகாணமட்ட பரதநாட்டிய போட்டி முடிவுகள்

01. தனி – 1ம் இடம் :- செல்லி. ஆரணி செல்வேந்திரகுமார்
உரும்பிராய் கலைக் கோயில் மன்றம்,
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு,
(யாழ்ப்பாண மாவட்டம்)

02. குழு – 1ம் இடம்:- உரும்பிராய் கலைக்கோயில் மன்றம்,
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு,
(யாழ்ப்பாண மாவட்டம்)

03. தனி – 2ம் இடம் :- செல்வி மஞ்சு பார்க்கவி அமரநாதன்
வவுனியா திருமறைக்கலா மன்றம்,
வவுனியா பிரதேச செயலர் பிரிவு
(வவுனியா மாவட்டம்)

04. குழு – 2ம் இடம் :- வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி
வவுனியா பிரதேச செயலர் பிரிவு
(வவுனியா மாவட்டம்)

05. குழு – 3ம் இடம்:- மன்னார் நாட்டிய கலார்ப்பனா மன்றம்,
மன்னார் பிரதேச செயலர் பிரிவு
(மன்னார் மாவட்டம்)

## யாழ்ப்பாணம் தொடர்பான பதிவுகள் இரண்டு.

01. யாழ் மாவட்டத்தின் பெரும் சொத்தாக திகழ்வது கல்வியும், கலையும் ஆகும். இவை இரண்டும் தமிழர் பண்பாட்டு மரபில் பாரம்பரியமான விடயங்கள் ஆகும். கலைகள் ஒரு இனத்தின் இருப்பின் ஆதாரமாகவும், அதன் பண்பாட்டின் நிலைக்களன் களாகவும் விளங்குபவை. இத்தகைய செயற்பாடு களில் ஈடுபட்டு மறைந்த அறிஞர்கள், கலைஞர் களின் புகைப்படங்கள் மற்றும் வணக்கத்தலங்கள், பாரம்பரியப் பொருட்கள், தமிழர் தம் வாழ்வில் கைக் கொள்ளும் பிறப்பு முதல் இறப்பு வரையான சடங்கு ஆசாரங்கள், புராதனமான இடங்கள் என்பவற்றை புகைப்படங்களாக "பெட்டகம் - 01" என்ற பெயரில் உள்ளடக்கி 2008.10 ம் மாதம் 15, 16, 17 ம் திகதிக ளில் காலை 9.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை வலி வடக்கு பிரதேச செயலகத்தால் காட்சிப் படுத்தப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், கலாசார உத்தியோகத்தரும் காலத்தின் தேவை அறிந்து காத்திரமான முறையில் செயற்படுத்திய இப் புகைப்படக் கண்காட்சி குடாநாட்டு அறிஞர், கலைஞர் பாடசாலை மாணவர்களிடையே பெரு வரவேற்பை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. பெட்டகத்தின் கண்காட்சி ஏனைய பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அதன் மூலம் அப்பிரதேச அறிஞர், கலைஞர் அடையா ளப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்படுவதுடன், எதிர்காலச் சந்ததியினருக்கும் பெருமைமிக்க பெறுமதியான சான்றாதாரமாக "பெட்டகங்கள் திகழும்" பெட்டகம் மூடி இருக்காமல் திறந்து தன் பெருமையை சாற்ற வேண்டும்.

02. வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவையினர் "யாழ்ப்பாணத் தகவல் களஞ்சியம்" என்ற பெயரில் இறுவட்டு ஒன்றை தயாரித்து யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 22.11.2008ம் திகதி சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு வெளியிட்டு வைத்தனர். இவ் இறுவட்டில் வழிபாட்டுத் தலங்கள், சுற்றுலா பிரதேசங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் விபரங்கள் தொடர்பு முகவரிகள், யாழ் மாவட்ட கிராமங்களின் வரலாறுகள், பல்துறைப் பெரியாரின் விபரங்கள் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது. குறிப் பிடத்தக்கது. இத்தகைய முயற்சியில் ஈடுபட்டவர் களை மனம் திறந்து பாராட்டலாம். - குணா

## பிரதேச கலாசார விழாக்கள்

தத்தம் பிரதேச கலைஞர்களை ஊக்குவிக்கவும், கலைஞர்களை கௌரவிக்கவும் பிரதேச கலாசாரப் பேரவைகள் பண்பாட்டு பெருவிழாக்களை வருடா வருடம் நடாத்தி வருகின்றன. பிரதேச கலைஞர்க ளின் இயல், இசை, நாடக நிகழ்வுகள் இத்தினங் களில் நிகழ்த்துகை செய்யப்படும்.

அந்த வகையில் வலிகாம் வடக்கு பிரதேச செயலகம் 2008.08.31ம் திகதியும், வலிதென் மேற்கு பிரதேச செயலகம் 2008.09.01ம் திகதியும், தென்மராட்சிப் பிரதேச செயலகம் 2008.09.13ம் திகதியும், நல்லூர் பிரதேச செயலகம் 2008.09.27, 28ம் ஆம் திகதிகளிலும், வெங்கலச் செட்டிகுளம் 2008.11.12ம் திகதியும் தமது பண்பாட்டு பெருவிழாக்களை மிகச் சிறப்பான முறையில் நடாத்தி இருந்தன. இதில் நல்லூர் பிரதேச செயலகம் "கலைஞானச் சுடர்" என்னும் ஆவண கையேட்டினை வெளியி ட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. வருடா வருடம் பிரதேச ரீதியான விழாக்களை நடாத்து வதன் மூலம் அப்பிரதேச கலைஞர்கள் ஊக்குவி க்கப்படுவதோடு, பிரதேச கலைகளையும் வளர்ச்சி பெற செய்யலாம்.

- குணா

## 27,28.11.2008 இரு தினங்கள் வவுனியாவில் நடைபெற்ற கூத்துப்பயிற்சிப்பட்டறை நிகழ்வு






வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் இதனை ஒழுங்குசெய்து நடாத்தினார்

# ஆழிப்பேரலை நான்காம் ஆண்டு 26.12.2008 (தேசிய பாதுகாப்புத் தினம்) நிகழ்வுகள்



ஆழிப்பேரலை பேரனர்த்த நான்காம் ஆண்டு நினைவான 26.12.2008 (தேசிய பாதுகாப்பு தினம்) அன்று வடமாகாண பிரதம செயலாளர் திரு. சி. ரங்கராஜா அவர்கள் தேசிய பாதுகாப்பு தின உரையில் "மனித வரலாற்றில் எத்தனையோ அனர்த்தங்கள் நடந்துள்ளன. ஆனால் சமகாலத்தில் இந்த பரம்பரையில் ஏற்பட்ட நிகழ்வு இந்தச் சுனாமி அனர்த்தம். இதன் மூலம் பல தகவல்கள் பல செய்திகள் பூரணமாக கிடைக்கப் பெற்றுள்ளன.



மனிதன் இயற்கையை வென்று விட்டானென்று கொக்கரித்து இறுமாப்பு கொண்டிருந்த வேளையில், மனிதன் மீது இயற்கையினுடைய அதிகாரம் இருக்கின்றது என்ற செய்தி இந்த சுனாமி அனர்த்தத்தின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ளது. இயற்கையுடன் இயைந்து வாழ வேண்டும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். அத்துடன் மனிதனது உண்மையான மனிதத்தன்மை மதம், மொழி, இனம், நிறம் கடந்து வெளிப்பட்டதை இவ் அனர்த்தத்தின் பின்னாலான செயற்பாடுகள் மூலம் காண முடிந்தது. தனிமனித பிரச்சினையோ, தனிமனித சுதந்திரமோ இல்லை. எல்லாமே பொதுவான பிரச்சினைதான்.

எதிர்காலத்தில் இயற்கையின் அனர்த்தங்களுக்கு எதிராக முகங்கொடுக்கக்கூடிய தயார் நிலையில் உள்ளோம் என்ற விடயம் இப்படியான நினைவு நிகழ்வுகள்ன் மூலம் தொக்கி நிற்கின்றது எனக்கூறினார்.

# இப்தார் நிகழ்வு - 2008



ஏழைகளின் பசியை ஏனையோரும் அறிந்து கொள்ளவும், அளவற்ற அருளாளனும் நிகரற்ற கொடையாளனுமாகிய அல்லாவின் கிருபை வேண்டியும் வருடா வருடம் இஸ்லாமிய சகோதரர்களால் கடைப்பிடிக்கப்படும் புனித நோன்பு நாட்களில் நிகழ்த்தப்படும் இப்தார் நிகழ்வு, 2008.09.23ம் திகதி மாலை 5.00 மணிக்கு வடமாகாண விவசாய அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் திருமதி. ஆர்.விஜயலட்சுமி அவர்களும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜனாப் எம்.கே.எம்.ஹனீபா அவர்களும் ஏனைய வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்களும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மூர்வீதி முஹியீன் ஜும்மா பள்ளி வாசல் மௌலவி ஹாரிஸ் (ஹாபீஸ்) மற்றும் ஆண்டாங்குளம் ஹிலுர் ஜும்மா பள்ளிவாசல் மஸ்ஜிதுல் மௌலவி -நௌபீர் (மிஸ்பாஹியா) ஆகியோர் இஸ்லாமிய மார்க்கம் கூறும் சமூகவியல், வாழ்வியல் கருத்துக்கள் தொடர்பாக சிறப்புரைகள் ஆற்றினர். கிறாத் ஓதலுடன் ஆரம்பமாகிய இப்தார் நிகழ்வானது துவாப் பிரார்த்தனையுடன் இனிதே நிறைவு பெற்றது.

# ஒளி விழா - 2008


வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சகல சமயங்களினதும் பொது விழாக்களை கொண்டாடி வருகின்றது. இந்த வகையில் இயேசு பாலன் பிறப்பை குறிக்கும் முகமான ஒளிவிழா நிகழ்வு 2008 - 12-22ம் திகதி வடமாகாண கல்வி அமைச்சின் நுழைவாயிள் நடைபெற்றது.



இந் நிகழ்விற்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமை வகித்தார். பிரதம அதிதியாக வடமாகாண பிரதம செயலாளர் திரு.சி. ரங்கராஜா கலந்து கொண்டார். திருகோணமலை மெதடிஸ்த திருச்சபை மாணவ. மாணவிகளினால் கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டன.

பாலன் பிறப்பு செய்தியை நிலாவெளி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட் திரு V.G.குணம் அவர்களும் திருகோணமலை திருச்சபையைச் சேர்ந்த அருட் சகோதரர் ஆர். ஜேசு சகாயம் அவர்களும் வழங்கினர். 10 வயதுக் குட்பட்ட மாகாண அமைச்சு உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வின் வரவேற்புரையை பண்பாட்டலு வல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. என். ஸ்ரீதேவி அவர்கள் நிகழ்த்தினர்.





- குணா

# 'ஒரு நாள்' விவரணக் குறும்படம் பற்றிய சில பார்வைக் குறிப்புகள்.

மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என சைவசமயம் அழகாக சொல்லியிருக்கின்றது. ஏனைய மதங்களும் மக்கள் சேவைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. செய்யும் தொழிலே தெய்வம் என மதித்துப் போற்றி வெற்றி பெற்றவர்கள் எம் முன்னோர்கள். ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது. அரசாங்க அலுவலகங்களில் என்ன நடக்கிறது என்பதை ஒருநாள் விவரணக் குறும்படம் சித்தரிக்கின்றது.

எமது நோக்கம் எவரையும் புண்படுத்துவதல்ல என்பதாக குறும் படத்தின் ஆரம்பம் தெரிவிக்கின்றது. கடமை தவறிய அரசாங்க ஊழியர்களின் மனச்சாட்சி நிச்சயம் அவர்களைப் புண்படுத்தும். அந்தளவுக்கு தத்ரூபமாக காட்சிபடுத்தல் அமைந்துள்ளது.

அலுவலகத்திற்கு தாமதமாக வரும் இளம் பெண் ஊழியர், அவருக்கு வழங்கப்படும் சலுகைகள், அவரைப் பின்பற்றி ஏனைய ஆண். பெண் ஊழியர்கள் நடந்து கொள்ளும் விதம், இவை எல்லாம் ஒரு அரசாங்க அலுவலகத்தை கண்களுக்கு விருந்தாக்குவதாக உள்ளது. இருபத்து மூன்று நிமிடங்களே எடுக்கப்பட்ட ஒருநாள் விவரணக் குறும்படம் அரசாங்க அலுவலகங்களின் இன்றைய நிலையை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளது.

ஒரு நாள் குறும்படத்தின் ஒளிப்பதிவு சம்பத், படத் தொகுப்பு விஜித்த குமார். மூலக்கதை என்.ஸ்ரீதேவி என அனைவரது உழைப்பும் சிறப்பாக பயன் பட்டிருக்கிறது.

நல்லதொரு குறும்படத்தை பார்த்த உணர்வு ஏற்படுகின்றது. அரசாங்க ஊழியர்கள் அனைவரும் இப்படி நடந்து கொள்கிறார்களா என இதைப் பார்க்கும் நீங்கள் கேட்பது புரிகிறது. இப்படியும் நடப்பது சரியா என ஒவ்வொரு அரசாங்க ஊழியர்களின் மனங்களையும் தட்டிக் கேட்கிறது ஒருநாள் விவரணக் குறும்படம்

ஒருநாள் விவரணக் குறும்படம் போன்ற நல்ல குறும்படங்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும். உரையாடல்கள் இன்றி காட்சிப் படுத்தல் மூலம் விளங்க வைத்த இயக்குனர் அருணா செல்லத்துரை தனது ஆளுமையை சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார். வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இக் குறும்படத்தை வெளியிட்டுள்ளது.

முருகேசு ரவீந்திரன்
செய்திப்பிரிவு
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்
கொழும்பு – 07

ஆடுதல் பாடுதல், சித்திரம், கவி,
ஆதியினையகலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர்பிறர் ஈன
நிலை கண்டு துள்ளுவர் – பாரதி


# மானுடம் வெல்லட்டும்

மனிதத் தன்மை
மனிதனிடம் இப்போவெல்லாம்
மரித்துச் செல்வதால்
சமாதானத்தின்
புனிதத் தன்மை
இப்போவெல்லாம் புரியா மொழியாகிவிட்டது.
சிறகடித்து வெண்புறா
சிந்து பாடிய காலம் போய்
சிறகொடிந்து குற்றுயிராய்
அது -
சேடம் இழுக்கிறது
புற்றீசல் போல் புறப்பட்ட
ஜனநாயகக் காவலர்கள்
குழம்பிய குட்டையில் மீன்பிடித்து
தம்மைத் தாமே வளர்த்து
தமக்குத் தாமே
கிரீடம் சூடி உலாவருகின்றனர்!
சமாதானம் சரிந்து போனாலும்
உலகமே எரிந்து போனாலும்
நீரோ மன்னனாக
பிடில் வாசிக்கும் பேர்வழிகள்
போதனைப் பொன்மொழி உதிர்த்து
போதையில் மிதக்கும் போது
மனிதாபிமானத்தின்
மறுபிறவிகள் நாமேதானென
மார்தட்டிக் கொள்ளும் போதும்
புறப்படும் சன்னங்கள்
சமாதானத்தின் இதயத்தை
சல்லடையாக்குகின்றன!
ஓ..... தலைவர்களே
ஓய்வெடுங்கள் சிலகாலம்
மனிதம் கொஞ்சம் சுவாசிக்க
மனம் வைத்து விலகுங்கள்
அணு ஆயுதத்தை
சமாதானத்திற்குப் பாவித்து
இன்னும் பல ஹிரோசிமாக்களை
சாம்பல் மேடாக்க சங்கல்பம் பூணும்
'வெள்ளை' உள்ளம் கொண்ட
நல்ல மனிதர்களே உங்கள்
வாய்மொழி கூட உலகின்
சமாதானத்தை சங்காரம் செய்கின்றன!
பாலுக்கு அழுகிறது குழந்தை
பகலுக்கு ஏங்கி இருளில்
பட்டினி கிடக்கிறது உலகம்
பாலுக்கும் காவலாய்
பூனைக்கும் தோழனாய்
போக்குக் காட்டும் போலிகளால்
அகதிகளாய் அலைந்து
அனுதினம் செத்தொழிகிறது
மனித குலம் .
மதங்கள் மதவெறி அகற்ற
மனம் வைக்கட்டும்
இனங்கள் இனவெறி விலக்கி
கைகோர்க்கட்டும்
மொழிகள் மோதலை விட்டு
அன்புமொழி பேசட்டும்
தன்னலக்காரர்களால்
தகனம் செய்யப்பட்ட சமாதானம்
சாம்பல் மேட்டில் உயிர்த்தெழும்
பீனிக்ஸ் பறவையாய்
வீச்சுடன் எழட்டும்
வேற்றுமைகளை தகர்த்தெறிந்து!
புதைந்து போன மானுடத்தில்
புதிய துளிர் முளைத்தெழுந்து
பூத்துச் சிரிக்கட்டும்!

குமாரசாமி மாக்ஸ்
நீர்ப்பாசனத்திணைக்களம்

(வடமாகாண ஆக்க இலக்கியப் போட்டி 2008
1வது பரிசு பெற்ற கவிதை)

## வடந்தை இரண்டாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு



## சிறந்த நூல்களுக்கான பரிசுப் போட்டி—2008

### வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு

### வரோதய நகர் – திருகோணமலை

வட மாகாண சபைக்கு உட்பட்ட 5 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர் களிடமிருந்து சிறந்த நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர் பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறை களில் போட்டிகள் இடம்பெறும்.

- நாவல்
- சிறுவர் இலக்கியம்
- சிறுகதை
- இலக்கிய ஆய்வும் விமர்சனமும்
- கவிதை
- உயர்கல்வி
- நாடகம்
- பல்துறை

போட்டி விதிகள்

1) ஒரு எழுத்தாளர் எல்லாப் போட்டி களிலும் பங்குபற்றலாம்.
2) நூலாசிரியர் வடமாகாணத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3) நூல்கள் 2008 ஆம் ஆண்டு ஜனவரி - 1ம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்குமிடையில் அச்சில் வெளிவந்தவையாக இருத்தல் வேண்டும்.
4) போட்டிக்கு 4 நூல்கள் அனுப்பி வைத்தல் வேண்டும்
5) நூலாசிரியர் ஒருவராக இருத்தல் வேண்டும்
6) போட்டிகளில் நடுவர்களின் தீர்பே இறுதியானது.

நூற் பிரதிகள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 2009.04.30 ஆம் திகதி நூல்களை பதிவு அஞ்சல் மூலம்

உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு, வடமாகாணம்,
வரோதயநகர், திருகோணமலை.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## குறுந்திரைப்படக் காட்சி

மிக வேகமான இன்றைய சூழலில் தமது நேரத்தை விரயப்படுத்த யாரும் விரும்புவதில்லை. கதைகள், சிறுகதைகளாகவும் கவிதை மரபுக் கவிதை, நவீன கவிதை, ஹைக்கூ என வடிவம் மாறியது, போல திரைப்படமும் குறுந்திரைப்படமாக வடிவமாற்றம் பெற்றுள்ளது. குறித்த நேரத்தில் எடுத்துக் கொண்ட கருவினை மிக நேர்த்தியாகவும் காத்திரமான முறையிலும் சுருங்க கூறி விளங்க வைக்கும் வடிவமாக இக் குறுந்திரைப்பட வடிவம் பரிமாணம் பெற்றுள்ளது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கடந்த காலங்களில் ஆவணப்படங்கள், குறும் படங்களைத் தயாரித்து காட்சிப்படுத்தியுள்ளது. ஏனைய உள்நாட்டு மற்றும் புலம்பெயர் கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களையும் காட்சிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கடந்த 03.11.2008 அன்று புலம் பெயாந்த சூழலில் பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்ட மனுசி, கனவுகள் எனும் இரண்டு குறுந்திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மாதாந்தம் தொடர்ச்சியான முறையில் குறும் படங்களைக் காட்சிப்படுத்துவதுடன் அவை தொடர்பான கருத்தாடலையும் ஏற்படுத்தி குறும்படங்கள் பற்றிய சிறந்த விமர்சனங்களுக்கான களத்தை ஏற்படுத்திக் கொடுத்து, சுவைஞர்கள், விமர்சகர்களை உருவாக்குவதும் திணைக்களத்தின் நோக்கமாகும். தம் திணைக்களங்கள் சார்பான செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கு குறுந்திரைப்பட வடிவத்தை பயன்படுத்துவதையும் புதிய குறுந்திரைப்படத்தை உருவாக்குவதற்குரிய சூழலை ஏற்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு கல்வி அமைச்சின் செயலாளரினால் இச்செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்திலும், புலம்பெயர் சூழலிலும் தயாரிக்கப்பட்ட சிறந்த குறுந்திரைப்படங்கள் காட்சிப்படுத்தலுக்காக வடமாகாண பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தினால் வரவேற்கப் படுகின்றன.

– குணா

## ஒரு பக்கச் சிறுகதை கவிதை II

வடந்தையில் பிரசுரிப்பதற்காக சிறுகதைகள் கவிதைகள் எதிர்பார்க்கப் படுகின்றன. வடந்தையில் ஒரு பக்கத்திற்குள் அடங்கக் கூடியதாக தங்களின் படைப்புகளை

ஆசிரியர்,
வடந்தை,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு, வரோதய நகர்,
திருகோணமலை

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தரமான படைப்புகள் வடந்தையில் பிரசுரிக்கப்படும்.

(சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆயினும் அந்த அனர்த்தத்தின் சுவடுகள் இன்னும் மனங்களில் ஆழ்ந்தே உள்ளன. 26/12/2004 ன் அவலத்தை சமீபத்திய கவிதைப் பட்டறை ஒன்றில் பங்கு பற்றிய இளம் மாணவி ஒருவர் மீளவும் நினைவு கூர்கிறார்.)

### சுனாமி

வந்தது வந்தது சுனாமி
வாரிச் சுருட்ட வந்தது
சந்தடி இன்றியே வந்தது
சரிந்தது மரங்கள் வீடுகள்
விந்தை அலைகள் வந்தது
வீசி உயிர்களைக் கொன்றது
அவலக் குரல்கள் எழுந்தன -
அவை
அடங்காதின்றும் ஒலிக்கின்றன
நொந்து பிரிந்தவர் பல்லாயிரம்
நூலோர் கதறினர் பாயிரம்

செல்வராசா. சுசிதா
யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்

### தகவல்

தமிழிற்கும் சைவத்திற்கும் தொண்டு செய்த புலவர்களின் வரலாறு பின்வரும் நூல்களில் விரிவாக எழுதப்பட்டுள்ளன.

1) பாவலர் சரித்திர தீபம் – சதாசிவம் பிள்ளை
2) தமிழ் புலவர் சரித்திரம் – குமாரசாமிப் புலவர்
3) தமிழ் வரலாறு – புலவர் பூபாலபிள்ளை
4) ஈழநாட்டுத் தமிழ்புலவர் சரித்திரம் – வித்துவசிரோமணி கணேசையர்
5) இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ் புலவர் வரலாறு – பண்டிதர் அப்புத்துரை

மீட்டல்


## சிறு நண்டு மணல் மீது

– மகாகவி –

**சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்
கறி சோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீது அவள் கொண்ட பயம் ஒன்று காணும்
ஏலேலோ...... தத்தையா ஏலைஏலோ
தத்தையா ஏலைஏலோ**

**வெறுவான வெளிமீது மழைவந்து கீறும்
வெறிகொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்.
நெறிமாறு படநூறு சுழி வந்து சூழும்
நிலையான தரைமீதில் இலை போல் ஈடாடும்.**

**வாடை குளிர்ந்ததெனில் வாடிவிடலாமோ
வாரும் கடல் முழுதும் ஓடி வலைவீச
பாடொன்றிரண்டகல முன்பகலும் ஆகும்
பாரும் கிழக்கிலொரு வெள்ளி ஒளி வீசும்**




# பதிப்புரை

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. ஒரு இலக்கியவாதி தனது அனுபவங்களைத் தொகுத்து ஒரு படைப்பாக ஆக்குகிறான். அனுபவத்தின் வெண்கூட்டில் இருந்து பிறக்கும் இலக்கியங்கள் கவிதை, சிறுகதை, நாவல் என பல்வகைத்தனவாகும். படைப்பாளி மறைந்து போனாலும் காலத்தில் சாகாத படைப்புகளாக விளங்கும் இலக்கியங்கள் அக்காலத்தின் வாழ்வியலினை அவ்வரலாற்றுப் படிமங்களுடன் எதிர்கால சந்ததியினருக்கு வழங்குகின்றன. ஒரு வரலாற்று ஆவணமாக விளங்குவதோடு, வரலாற்றினை விளக்குவதாகவும் அமைந்துவிடுகின்றன.

50களின் பின்கூற்றில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு 90 களின் நடுக்கூறு வரை வெளிவந்தது. 700க்கு மேற்பட்ட சிறுகதைகள் ஈழநாட்டில் வெளிவந்துள்ளன. கிட்டத்தட்ட நான்கு தசாப்தகாலம் உயிர்வாழ்ந்த ஈழநாடு எத்தனையோ எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துள்ளது.

மறைந்த இலங்கையர்கோன் முதல் டானியல், செம்பியன் செல்வன், முனியப்பதாசன் வரையும், இன்றும் படைப்புகளைத் தந்து கொண்டிருக்கின்ற எழுத்தாளர்களின் படைப்புகள் கூட ஈழநாட்டை அலங்கரித்துள்ளன.

இது ஒரு அனுபவப் பகிர்வு. தாம் சார்ந்த சமூகக் கிடக்கைகளை படைப்பாக்கம் செய்வதற்கு சிறுகதை என்ற வடிவத்தினாலேயே அதிகம் சாத்தியப்பட்டுள்ளது. பெருமளவு தமிழ்ச் சிறுகதைகள், பத்திரிகைகள் சார்ந்துதான் வளர்ச்சியினை எட்டியுள்ளன. அதில் ஈழநாடு முன்னனியில் திகழ்ந்து, படைப்பாளிகளுக்கு களம் கொடுத்து முன்னோக்கி நகர்த்தி சென்றுள்ளது. என்பதற்கு அறுவடையாக விளங்குகின்ற இத் தொகுப்பு ஒரு சான்றாகும்.

இக்கதைகளை வெளியிட உதவியோர் ஈழநாடு பத்திரிகை ஆசிரியர்களாக இருந்த இராஜஅரியரத்தினம், கே.பி. கரன், சசிபாரதி முதலானோராவார். ஈழத்து இலக்கியத்துக்குச் செழுமை சேர்த்த படைப்புகளை பிரசுரித்து நமக்களித்த இவர்களை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

ஈழநாடு சிறுகதைகள் தொகுப்பு – 1, நாம் முன்னர் வெளியிட்ட மறுமலர்ச்சிச் சிறுகதைகள் ஈழகேசரி சிறுகதைகள் தொகுப்புகளின் தொடர்ச்சியாகும்.

இதனை வெளியிடுவதற்கு முன்னின்று உழைத்த சகலருக்கும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்ற முறையில் எனது பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

**இ.இளங்கோவன்,**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வட மாகாணம்,
திருகோணமலை.